**தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) - 2019**

---

தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட எஸ்எல் - பி 108 இலக்க 2013 மார்ச் 14 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செறய்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தேசிய வீதிகளில் பிரதான பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதும் அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,250 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 16,132 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 20,914 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 12,381 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ஜப்பான் யென் 3,751 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 மார்ச் மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2019 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. கடன் மீளப்பெறல் காலாவதி 2021 ஜுன் 5 இல் மூட பட்டியலிடப்பட்டிருந்ததுடன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை கடன் நீடிப்பினை வழங்க விருப்பப்படவில்லை. அதன் பெறபேறாக ரூபா 7,760 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 4,595 மில்லியன் அல்லது மொத்தக்கடனில் 37 சதவீதம் செயற்திட்டத்தின் மிகுதி வேலைப்பரப்பிற்கு பயன்படுத்த முடியாமல் போகக் கூடும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது ரூபா 44.83 மில்லியன் கிரயத்தில் 05 மோட்டார் வாகனங்களை பெறுகை செய்திருந்த போதிலும், ரூபா 40 மில்லியன் மாத்திரமே ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்நதுடன் மிகுதி தொகை ரூபா 4.83 மில்லியன் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.07 இன் பிரகாரம் மூலதனமாக்கப்படாமல் சிவில் நடைமுறை வேலைக்கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | மோட்டார் வாகன கணக்கின் கிரயத்தின் குறை மதிப்பீடு. | உடன்படுகின்றேன். சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | 05 மோட்டார் வாகனங்களின் கிரயம் சரியாக அடையாளப்படுத்தப்பட்டு ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 7.32 மில்லியன் | கணக்கீட்டு கொள்கையின் பிழையான பயன்படுத்தல். | உடன்படுகின்றேன். இது ஒரு மேற்பார்வையின் காரணத்தாலானதுடன் தற்போது இது சரி | நிதிக் கூற்றுக்களிற்கான சீராக்கங்கள் ஆதாரங்கள் பெறப்படாமல் |

| | | |
|---|---|---|
| தொகையான கடன் காரணமாக எழுந்த நடைமுறை அல்லாப் பொறுப்பு தேசிய சேமிப்பு வங்கிக்கு கொடுத்து தீர்த்ததற்கான ஆதாரங்கள் பெறப்படாமல் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மீளாய்வாண்டின் போது பதிவளிக்கப்பட்டிருந்தது. | செய்யப்பட்டிருந்தது. | செய்யப்பட முடியாது. |

**3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2013 மார்ச் 14 இல் ஏற்படுத்தப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்திற்கு காணப்படும் மொத்த கடன் வசதி ஜப்பான் யொன் 12,381 மில்லியனிற்கு சமமான ரூபா 20,914 மில்லியனாக இருந்ததுடன் கடனானது 2021 ஜூன் 5 இல் காலாவதியாகின்றது. இருப்பினும், மொத்த கடன் வசதிகளில், செயற்திட்டமானது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஜப்பான் யொன் 7,794 மில்லியனிற்கு சமனான ரூபா 10,373 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியிருந்தது. அதனடிப்படையில், ஜப்பான் யொன் 4,595 மில்லியனிற்கு சமமான ரூபா 7,760 மில்லியன் செயற்திட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தினால் பயன்படுத்த முடியாமல் போக கூடும். மேலும், கடனின் முடிவுத்திகதியானது கடன் வழங்கும் முகவரினால் மேலும் நீடிக்கப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தத்தினை கையளித்தல் மற்றும் பாலங்களின் நிர்மான நடவடிக்கைகள் போன்றவற்றில் தாமதம் காரணமாக, மொத்த | செயற்திட்டத்தின் மீதி வேலைகள் நிதி பற்றாக்குறை காரணமாக பூர்த்திசெய்ய முடியாமல் போகக்கூடும். | யென் 10,289 மில்லியன் மாத்திரமே சிவில் வேலைகளிற்கு நகர்த்தப்பட்டிருந்தது. பொதி 1,2 இற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதி யென் 8,890 மில்லியனாக இருந்தது. அதனால் பயன்படுத்தல் சதவீதம் 86.4% ஆகும். மற்றைய பொதிக்காக காணப்படும் மிகுதித்தொகை யென் 1,399 மில்லியனானதுடன் பொதி 1&2 இன் ஒப்பந்த பெறுமதியுடன் ஒப்பிடும் போது அது 3 பாலங்களிற்கே போதுமானதாகும். | செயற்திட்ட காலப்பகுதிக்கள் வேலைப்பரப்பின் வேலைகளை பூர்த்தி செய்ய பால நிர்மான வேலைகள் முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடன் வசதிகளில் 37 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜப்பான் யென் 4,595 மில்லியன் செயற்திட்டத்தில் கால நிர்மான நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படாமல் கடன் வழங்கும் முகவரிற்கு திருப்பி செலுத்த வேண்டியிருந்தது. | | | |
| (ஆ) | செயற்திட்டமானது 5 ஒப்பந்தபொதிகளின் கீழ் தென், வட, வடமேல், சப்பிரகமுவ மற்றும் மேல் மாகானங்களிலுள்ள 19 தேசிய வீதிகளில் 37 புதிய பாலங்களை நிர்மானிக்க எதிர்பார்த்திருந்தது. தென்மாகானத்திலுள்ள 10 பாலங்களின் நிர்மான வேலைகளில், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 பாலங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. 2015 மார்ச் 20 இல் ஆரம்பிக்கப்பட்ட பொல்துவ மோதர மற்றும் கொய்யபானவிலுள்ள 02 பாலங்களின் கீழான நிர்மான வேலைகள் வேலைத்தளத்தினை கையளிப்பதில் தாமதம், மேலதிக வேலைகள் மற்றும் பாவனை சேவைகளை அப்புரப்படுத்துவதில் தாமதம் போன்ற காரணங்களினால் 166 நாட்கள் தொடக்கம் 438 நாட்கள் என்ற வீச்சிலான தாமதத்துடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. 2016 நவம்பர் 24 இல் ஆரப்பிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள 08 புதிய பாலத்தின் நிர்மான நடவடிக்கைகள் கூட 120 நாட்கள் தாமதத்துடன் 2018 திசெம்பர் 24 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | பால நிர்மான வேலைகளின் பூர்தியாக்கல் தாமதமானதுடன் செயற்திட்டத்தின் கிரயத்தை அதிகரித்தது. | திட்டமிடல் கட்டத்தில், உள்நாட்டு விகிதங்களை பயன்படுத்தி பால வடிவமைப்ப அலுவலகம், ஆர்டிஏ வினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை பயன்படுத்தி பாரிய பாலங்கள் நிர்மான செயற்திட்டத்தின் ( எம்பிசிபீ) கீழ் 37 பாலங்களை நிர்மானிக்க அடயாளப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்ட அமுல்படுத்தல் கட்டத்தில் பின்வரும் காரணங்களினால் ஏல விகிதங்கள் உயர்வாக ஆனது.<br>1) கடன் நிபந்தனைகளின் பிரகாரம் ஜப்பானிலிருந்து பெறுகை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுமதியின் மொத்த கிரயம் ஒப்பந்தத்தின் மொத்த பெறுமதியில் முப்பது (30%) சத வீதத்தினை விட குறைதலாகாது.<br>2) ஏலதாரர்களிற்கிடையேயான போட்டியின் பாகம் கடன் நிபந்தனைகளின் பிரகாரம் கூறு விலைக்காக பங்குபற்ற ஜப்பான் கூறு விலைதாரர்கல் மாத்திரமே அனுமதிக்கப்பட்டதனால் மிகவும் குறைவாக கானப்பட்டது. | ஆரம்ப கட்ட திட்டத்தின் பிரகாரம், பாலங்களின் புனரமைப்பு வேலைகள் கடன் காலம் காலாவதியாவதற்கு முன்னர் முதல் 2 வருடங்களிற்குள் அதனை ஆரம்பிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருப்பினும், பொதி 3,4 மற்றும் 5 இன் கீழான ஏனைய 3 மாகானங்களிலுள்ள 19 புதிய பாலங்களின் நிர்மான வேலைகள் ஜப்பான் ஏல தாரர்கள் மாத்திரமே ஏலத்தில் பங்குகொள்ள அனுமதிக்கப்பட்டமை, செயற்திட்டத்தின் பொதி 1 மற்றும் 2 இன் பால நிர்மான நடவடிக்கைகளில் தாமதம் போன்ற கடன் நிபந்தனைகளின் காரணமாக கைவிடப்பட்டிருந்தது. | | | |
| (இ) | இருக்கும் தகவல்களின் பிரகாரம், பொதி 1 பால நிர்மான நடவடிக்கைகளின் கீழ் 171 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 317 காணித்துண்டுகளை சுவீகரிக்க பட்டியலிட்டிருந்ததுடன் அதில் 127 துண்டுகளிற்கு அபிவிருத்தி செலவு உள்ளடங்களாக இழப்பீட்டு தொகை ரூபா 280.2 மில்லியன் காணிசுவீகர்ப்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, மொத்தமாக ரூபா 36.75 மில்லியன் 2019 திசெம்பர் 31 வரை இழப்பீடுகளை கொடுத்த தீர்ப்பதில் தாமதத்தின் மீது வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. 127 காணித்துண்டுகளில், செயற்திட்டமானது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1986 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க காணிசுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் 36 காணித்துண்டுகளிற்கு மாத்திரமே சுவீகரிப்பு செயன்முறையை பூர்த்திசெய்திருந்தது. | பால நிர்மானத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் மற்றும் காணி சுவீகரிப்பின் வட்டி கிரயங்கள் அதிகரிப்பு. | காணி சுவீகரிப்பு செயன்முறையை துரிதப்படுத்த, எஸ்பீஎம்யூ சிவில் வேலைகளை 2015 ஆம் ஆண்டு மார்சில் ஆரம்பித்ததன் காரணமாக, 2014/2015 ஆம் ஆண்டில் 1986 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க காணிசுவீகரிப்பு மற்றும் மிளவழங்கள் சட்டத்தின் கீழான பிரிவு 38 (அ) இனை பின்பற்றியிருந்தது. | நிர்மான வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணிசுவீகரிப்பினை பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | செயற்திட்டமானது பாலநிர்மான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நிதியளிப்பு ஏற்பாடு இல்லாமல் பொதி 3 இன் கீழ் 82 காணித்துண்டுகளின் சுவீகரிப்புடன் தொடர்ந்திருந்தது. இது இழப்பீடுகளை கொடுப்பதில் தாமதம் காரணமாக காணி சுவீகரிப்பின் மீதான வட்டி கிரயத்தினை அதிகரிப்பதில் பாதகமான விளைவினை ஏற்படுத்ததும். | செயற்திட்டத்தின் நிர்மான வேலைகளை தாமதம் மற்றும் காணி சுவீகரிப்பின் வட்டி கிரயங்கள் அதிகரிப்பு. | பொதி 03 இற்காக, காணி சுவீகரிப்பு கொடுப்பனவிற்காக ஜீஓஎஸ்எல் இலிருந்து நிதிகள் காணப்படுகின்றது. ஆனால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனின் தொடர்ச்சித்தன்மையானது ஜேஐசிஏ(JICA), ஈஆர்டி (ERD) உடனான கலந்தாலோசனை கட்டத்தில் இருக்கின்றது. 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு பொதி 03 இன் காணி சுவீகரிப்பு செயன்முறை 63% ஆகும். இறுதியாக, செயலாளர் (வீதிகள் மற்றம் நெடுஞ்சாலைகள்) JICA உடனான அனைத்து கலந்துரையாடல்களும் தோல்வியடைந்ததனால் ஈஆர்டி(ERD) இற்கு கடன் முடிவுறுத்தல் வேண்டுகோளை அனுப்பியிருந்தது. எஸ்பீஎப்யூ பொதி 03 இன் காணி சுவீகரிப்பின் பங்களிப்பு தொடர்பாக அமைச்சிடமிருந்து அறிவுறுத்தல்களை கோரியிருந்தது. | நிதியளிப்பு வசதிகள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். |